
# திராவிட தேசீயம் மாநில சுயாட்சி - ஏன்?

■ அறிஞர் அண்ணா



அறிஞர் அண்ணாவின் இரு நூல்கள்

# திராவிட தேசீயம்!

# மாநில சுயாட்சி – ஏன்?

**திராவிடர் கழக வெளியீடு**

பெரியார் திடல், 50, ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை– 600 007.

மறு பதிப்பு – ஜூலை, 2004

© பதிப்புரிமை பெற்றது

நன்கொடை (குறைந்த அளவு) ரூ. 6/–

அச்சிட்டோர் :
'விடுதலை' ஆஃப்செட் பிரிண்டர்ஸ்
50, ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை– 600 007.

# திராவிட தேசீயம்!

“பெரிதும் வணிகப் பெருங்குடி மக்கள் நடமாடும் இந்த சென்னை வட்டாரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூட்டம் ஏற்பாடு செய்து, அருள்கூர்ந்து தேர்தல் நிதியும் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக, கொத்தவால்சாவடிக்கு நாம் வந்தால், காசு கொடுத்து விட்டு அவர்கள் கொடுக்கும் சரக்கை எடைபோட்டு வாங்கிக் கொண்டு செல்வது வாடிக்கை. ஆனால், இன்று நாம் கொடுக்கும் சரக்கை (பேச்சை) அவர்கள் எடை போட்டு வாங்கிக் கொள்ளவேண்டும்.

## எப்படி மதிப்போம்?

ஒரு கடையில் நீண்ட நாள் வேலை பார்த்த ஒரு தொழிலாளி, அக்கடையிலிருந்து விலகிச் சென்றபின், ‘அந்தக் கடையில் தராசு சரியில்லை; வீசைக் குண்டு 40 பலம் இருக்காது’ என்று சொன்னால் என்ன பொருள்? ‘ஏனப்பா, நீதானே அந்தக் கடையில் இதுவரை நிறுத்துக் கொடுத்து வந்தாய்? அப்பொழுது உனக்கு இது தெரியாதா? இப்பொழுது வந்து இப்படிச் சொல்லுகிறாயே?’ என்றுதான் கேட்போம். அதற்கு அவன், ‘அப்பொழுது அப்படி! ஆனால், இப்பொழுது இப்படி’ என்பானானால் அவனை நாம் எப்படி மதிப்போம்?

## அறம் அதுதான்!

ஒருவர் கொத்தவால்சாவடிக்குச் சாமான் வாங்க வந்தால், சாமான் வாங்கும்போதே, அது நல்ல சரக்குதானா – அளவு சரியாக இருக்கிறதா – என்று ஆராய்ந்து பார்த்து உன்னிப்பாகக் கவனிப்பது தான் வாங்குவோரின் கடமை; சரியாக நிறுத்துக் கொடுப்பதுதான் வியாபாரிக்கும் அறமாகும்.

## அந்திக் கடையுமல்ல, அழுகல் சரக்குமல்ல!

இன்று சிலர் திராவிடநாடு இலட்சியத்தை மறுக்கிறார்கள்; மனமாச்சரியத்தால் 'இந்த இலட்சியம் தேவையில்லை' என்கிறார்கள்.

ஒருவர் இப்படிச் சொல்லி, இந்த இலட்சியத்தை எடுத்துவிடுவதற்கு, இது ஒன்றும் அவசர வியாபாரமுமல்ல; சைனாபஜாரில் 'போனால் வராது; – பொழுது விடிந்தால் கிடைக்காது' என்று விற்பார்களே – அப்படிப்பட்ட அந்திக் கடையுமல்ல. ஒரு வாரம் போனால் அழுகி விடக் கூடிய அழுகல் சரக்குமல்ல நம்மிடமிருப்பது.

**எனவே, உங்களுக்குள்ள சந்தேகம் திரும்வரை கழகத்திற்கு வராதீர்கள்; சந்தேகம் தீர்ந்த பிறகு வந்தால், பின்னர் சந்தேகப்படாதீர்கள்! சந்தேகம் அறவே நீங்கும் வரை உள்ளே வரவேண்டாம்!**

## அந்தப் பதில் நமக்குத் தேவைதானா?

கடையில் சாமான் வாங்கும்போதே, 'சரியாக நிறுக்கப்படுகிறதா?' என்று பாருங்கள். அப்படியில்லாமல், வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போய் அதன் பிறகு திரும்பி வந்து, 'சாமான் அளவு சரியில்லை என்று என் மனைவி சொன்னாள்; அதனால் திரும்பி வந்தேன்' என்று சொன்னால், புத்தியுள்ள கடைக்காரன் என்ன சொல்வான்? 'இனிமேல் அந்த அம்மாளையே சாமான் வாங்க வரச் சொல்லுங்கள்; நீங்கள் வரவேண்டாம்' என்றுதான் சொல்லுவான்!

## ஏமாளியல்ல நாம்!

திராவிட நாட்டுக் கொள்கையை ஏற்றுக் கொள்வதற்கு முன் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு ஆராய்ந்து பாருங்கள். ஒரு கூட்டத்தில் ஒரு விஷயம் புரிந்தது; இன்னொரு விஷயம் புரியவில்லை என்றால், இன்னொரு கூட்டத்தையும் கேளுங்கள்; உங்கள் சந்தேகம் தீரும் வரை நான் காத்துக் கொண்டிருக்கிறேன்.

எல்லாம் புரிந்துவிட்டதாகக் கழகத்திற்குள் வந்து விட்டு, அதன்பிறகு கொள்கை பிடிக்கவில்லை என்றால், கொத்தவால்சாவடியில் சரக்கை வாங்கி இராயபுரத்திலுள்ள வீட்டுக்குச் சென்று பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்துவிட்டுக் கூட அல்ல – பக்குவமாகச் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு மிச்சமிருப்பதைப் பொட்டலமாக மடித்துக் கொண்டுவந்து கடையில் கொடுத்து, 'சரக்கு நன்றாக இல்லை' என்றால், எந்தக் கடைக்காரனும் வாங்க மாட்டான். அதைப் போல், இந்தக் கடைக்காரனும் (தி.மு.க.) ஏமாளியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எனவே, ஆற அமர ஆராயுங்கள்; இது 1962–க்குப் பிறகு அழிந்துவிடும் என்றல்ல; அதன்பிறகு அறிவுக்கண் அடைப்பட்டு போய்விடாது. நன்றாகக் கழகக் கொள்கைகளை ஆராயுங்கள்; இவ்வளவுக்கும் இடம் கொடுத்துத்தான் இயக்கம் நடத்துகிறோம் நாங்கள்.

## கதையும் – கருத்தும்!

ஒரு சிறு கதையை உங்களுக்கு உதாரணமாகக் கூற விரும்புகிறறேன். ஒரு வைத்தியர், ஜோதிடர், சங்கீத வித்துவான் ஆகிய மூன்று பேரும் வெளியூருக்குப் போனார்கள். பாழடைந்த சத்திரம் ஒன்றில் அவர்கள் தங்கி, சமைத்துச் சாப்பிடத் திட்டமிட்டார்கள்; வைத்தியர் காய்கறி வாங்கப் போனார்; ஜோதிடர் அரிசி வாங்கப் போனார்; சங்கீத வித்துவான் அடுப்பு மூட்டினார்; வைத்தியர் காய்கறிக் கடைக்குச் சென்று 'என்ன இருக்கிறது?' என்று கடைக்காரனைக் கேட்டார்; கடைக்காரன், 'கத்தரிக்காய் இருக்கிறது' என்றான். 'கத்தரிக்காய் சூடு' என்றார் வைத்தியர். 'அப்படியானால் வெண்டைக்காய் வாங்கிப் போங்கள்' என்றான் கடைக்காரன். 'வெண்டைக்காய் உடம்புக்கு நல்லது என்றாலும், இது குளிர் காலமாகையால் சளி பிடிக்கும்' என்றார் வைத்தியர். இப்படியே ஒவ்வொன்றுக்கும் ஆராய்ச்சி செய்தார். கடைசியில் அவர் வாங்கு வதற்குப் பொருத்தமான காய்கறி என்ன என்று பார்த்தால் அந்தக் கடையிலே ஒன்றும் இல்லை. தட்டும் கூடையும் தான் மிஞ்சின.

அரிசி வாங்கப் புறப்பட்ட ஜோதிடர் குறுக்கே கருப்புப் பூனை ஒன்று வந்ததால் 'அபசகுனம்' என்று கருதி அந்த இடத்திலேயே ஒரு மணி நேரம் அமர்ந்து விட்டார். அதன் பிறகு புறப்பட்டார். அப்பொழுதும் சில 'அபசகுனங்கள்' ஏற்பட்டதால் தனது இராசி பலனை ஆராய்ந்தார். 'நமது ராசிக்கு இன்று சரியில்லை; இன்னும் மூன்று மணி நேரம் போக வேண்டும்; இப்பொழுது போனால் அரிசியும் கிடைக்காது; அப்படிக் கிடைத்தாலும் வேகாது; வெந்தாலும் உடம்புக்கு ஆகாது' என்று கருதி அங்கேயே மூன்று மணி நேரம் உட்கார்ந்து விட்டார்.

பாத்திரத்தில் தண்ணீரை வைத்து அடுப்பு மூட்டிய சங்கீத வித்துவான் தண்ணீர் நன்கு கொதித்து 'தளதள' வென்று ஓசை எழுப்பியதும், அந்த ஓசைக்குத் தகுந்தாற் போல் தாளம் போட ஆரம்பித்துவிட்டார். தமது தாளமும் தண்ணீர் கொதிக்கும் 'தளதள' வென்னும் ஓசையும் ஒத்து வராததால், 'இந்தத் தப்புத் தாளம் சபைக்கு எடுக்காது!' எனக்கூறி, சட்டுவத்தை எடுத்து அந்தப் பானைமீது அடித்து உடைத்துவிட்டார் – இப்படி ஒரு கதையுண்டு.

## எவ்வாறு கிட்டும் வெற்றி!

**இலட்சியப் பாதையில் செல்லும்போது இந்தக் கதையில் சொல்லப்பட்ட மூன்று பேருக்கும் ஏற்பட்டதைப்போல, சந்தேகம் ஏற்படுமானால் இலட்சியத்தில் வெற்றிகிட்டாது.**

நம்முடைய இலட்சியத்தைப் பற்றிப் பலபேருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. படித்தவர்களுக்கும் ஏற்பட்டது; படிக்காதவர்களுக்கும் ஏற்பட்டது; காங்கிரஸ்காரர்களுக்கும் ஏற்பட்டது; கம்யூனிஸ்ட்களுக்கும் ஏற்பட்டது. அவர்களுடைய சந்தேகங்களையெல்லாம் தம்பி சம்பத் போக்கினார்; துரதிருஷ்டவசமாக, போக்கிய அவருக்கே அந்தச் சந்தேகம் வந்து விட்டது.

காலரா நோய்க்கு மருந்து கொடுப்பார் டாக்டர்: பலருக்கு அந்த நோய் தீரும்; ஆனால், அவருக்கே அந்த நோய் வருதுண்டு. குஷ்ட நோய்க்கு மருந்து கொடுத்துப் பலருடைய நோயைத் தீர்க்கும் டாக்டருக்கே அந்த

நோய் ஏற்படுவதுண்டு. அதைப்போல, நம் சம்பத்துக்கே அந்தச் சந்தேகம் வந்திருக்கிறது.

## பிரதமப் 'பூசாரி' யானாரே!

சந்தேகப் பேயை ஒட்டுவதற்கு ஒரு நல்ல பூசாரியாக சம்பத்தை அமர்த்தியது தி.மு.க.

பேய் பிடித்தவர்கள் பல ரகம்; ஒவ்வொரு பேயையும் ஒட்டும்போது அந்தப் பேய் தான் யார் என்றும், தனக்குத் தேவை இன்னதென்றும் சொல்லும். அதைப் பேய் சொல்லுவதில்லை – சொல்ல வைப்பவன் பூசாரி!

அதைப்போல, நம்முடைய பிரதமப் 'பூசாரி' யான சம்பத் சந்தேகப்பட்டவர்களை யெல்லாம் ஆட்டிவைத்தார். 'காமராசரே!, உமக்குச் சந்தேகமா? உமக்குப் பூகோளம் தெரியாததால் இந்தச் சந்தேகம் வந்தது; பூகோளம் வாங்கித் தருகிறேன் – படித்துப்பாரும்' என்று சம்பத் சொன்னார். இப்படிப் பலபேருடைய சந்தேகப் பேயை விரட்டினார். ஆனால், அவருக்கே அந்தச் சந்தேகப் பேய் பிடித்திருக்கிறது.

எனவே, சந்தேகம் ஏற்படுபவர்கள், தங்கள் சந்தேகத்தை என்னிடம் தனியாக எடுத்துரைத்தாலும் அதற்கு விளக்கம் தரக் காத்திருக்கிறேன். இப்படிப்பட்ட கூட்டத்தில் கேள்வியாகவும் கேட்கலாம். எந்த வழியிலேனும் உங்கள் சந்தேகத்தைத் தெளியவைத்துக் கொள்ள வேண்டும்.

## தேசீயம் என்பதற்கு இலக்கணம் எது?

'தேசீயம், தேசீயம்' என்று இப்பொழுது பழக்கப் படுத்துவதால் அதைப்பற்றிச் சிறிது விளக்க விரும்புகிறேன்.

'அழகு, அழகு' என்கிறோமே எது உண்மையான அழகு? 'இதுதான் அழகு' என்று இதுவரை இலக்கணம் வரையறுக்கப்படவில்லை.

'வீரம் என்றால் இதுதான் வீரம்' என்று உறுதியிட்டு உறுதிப்படுத்தி இலக்கணம் சொல்ல முடியாது.

'தேசியம்' என்று காங்கிரஸ்காரர்கள் சொல்கிறார்கள். 'திராவிடத் தேசியம்' என்கிறோம் நாம். 'இல்லை, இல்லை' 'தமிழ்த் தேசியம்' தான் இருக்கிறது என்கிறார்கள் ஒருசாரர்.

'இந்தியத் தேசியம்' என்று வடநாட்டில் இருப்பவர்களும், இந்தியாவுக்கு வெளியே இருப்பவர்கள் 'ஆசிய தேசியம்' என்றும், ஆசியாவுக்கு வெளியே இருப்பவர்கள் 'தேசியம் என்பதே இல்லை! எல்லாம் சர்வ தேசீயம்தான் என்றும் சொல்கிறார்கள்.

இன்னும் வானவெளிக்குச் சென்று வந்தால், அண்ட சராசரங்கள் அனைத்தும் ஒரே தேசியம் என்பார்கள்.

இப்படி எது 'தேசியம்' என்று இன்னமும் வரையறுத்துச் சொல்ல முடியவில்லை.

இதற்குச் சிறிய உதாரணம் கூறி உங்களுக்கு விளக்க விரும்புகிறேன் உங்களிடத்திலே பெரிய பெரிய புத்தகங்களைப் படித்துக் காட்டி விளக்கங் கூறத் தேவையில்லை எனக் கருதுகிறேன். நான் அப்படிப்பட்ட புத்தகங்களைப் பார்க்காததால் அல்ல; அந்த அளவுக்கு நாடு பக்குவட் படாததால் நான் சிறிய எளிய உதாரணங்களைச் சொல்லுவது வாடிக்கை

இந்தக் கூட்டத்தில் உங்களைப் பார்த்து 'பாட்டுப் பாடத் தெரிந்தவர்களெல்லாம் ஒரு பக்கம் வாருங்கள்; பாடத் தெரியாதவர்களெல்லாம் மற்றொரு பக்கம் இருங்கள்' என்று நான் கேட்டுக் கொண்டு,. அதன்படி நீங்கள் வந்தால், பாட்டுப்பாடத் தெரிந்தவர்களில் சிலர் உயரமாக இருக்கலாம்; சிலர் குட்டையாக இருக்கலாம்; பலர் கருப்பாக இருக்கலாம் – சிலர் சிவப்பாக இருக்கலாம்; அவர்களில் இந்துக்களும் இருக்கலாம் – முஸ்லிம்களும் இருக்கக்கூடும்; கிறிஸ்தவரும் இருப்பார் – சைவரும் இருப்பார்; வைணவரும் இருப்பார். பொதுவாக 'பாட்டுப் பாடத் தெரிந்தவர் – தெரியாதவர்' என்ற அடிப்படையில்தான் இங்கே பிரிக்கப்படும்.

அந்த இரு பிரிவினரையும் பாட்டுப் பாடத் தெரிந்த 'தேசியம்' என்று சொல்லலாம்.

இன்னொருவர் வந்து 'இந்தக் கூட்டத்திலுள்ள உயரமானவர்களெல்லாம் ஒரு பக்கமும், குட்டையானவர்கள் மற்றொரு பக்கமும் வாருங்கள்' என்று சொன்னால், பாடத் தெரிந்த பிரிவினரும், பாடத் தெரியாத பிரிவினரும் கலைவார்கள். பாடத் தெரிந்தவர்களில் இருந்த உயரமானவர்களும், பாடத் தெரியாதவர் பிரிவிலிருந்த உயரமானவர்களும் ஒன்று சேர்வார்கள்; அப்போதும் முஸ்லிம், கிறிஸ்தவர், இந்து என்ற வித்தியாசம் இருக்காது; உயரத்தின் அளவிலேதான் பிரிக்கப்படுவார்கள்.

இன்னொருவர் வந்து, கையிலே காசு உள்ளவர்கள் ஒரு பக்கமும், இல்லாதவர் மற்றொரு பக்கமும் வாருங்கள் என்றால் காசு இருப்பவர்கள் தான் முந்திக்கொண்டு காசு இல்லாதவர்கள் பக்கம் செல்வர். ஏனென்றால், தங்கள் காசுக்கு எங்கே ஆபத்து வந்துவிடுமோ என அஞ்சுவர். அதனால் அப்பொழுது இரண்டு பிரிவு ஏற்படாது; எல்லாரும் ஒரே அணியில் இருப்பார்கள்.

உலகில் சேர்ந்து வாழும் மக்கள், இப்படி ஒவ்வொரு முறையில் பரம்பரை பரம்பரையாக – தலைமுறை தலைமுறையாக – பல நூற்றாண்டுகளாக, ஒரேவகை எண்ணம், ஒரேவகை பண்புகளால் வாழ்ந்த மக்கள், ஒரே தேசீய இயக்கமாகக் கருதப்பட்டார்கள்.

## வாட்டும் வடக்கும் தேம்பும் தெற்கும்

ஆங்கிலேயன் இந்தியாவுக்கு வந்த பின், ஆங்கிலேயன் ஆள்பவனாகவும் இந்தியர்கள் ஆளப்படுபவர்களாகவும் பிரிக்கப்பட்டனர்.

ஆளுபவர் ஒருபக்கமும், ஆளப்படுபவர்கள் மற்றொரு பக்கமும் இருந்தனர். இந்து – முஸ்லிம் – பவுத்தர் என்பதைவிட, ஆங்கிலேயர் – இந்தியர் என்ற பிரிவினை முக்கியத்துவம் பெற்றது.

உயரமாக இருப்பவர்களை அழைத்ததும், பாடத் தெரிந்த அணியிலிருந்த உயரமானவர்கள் பிரிந்து இன்னொரு பக்கம்

வந்ததுபோல், வெள்ளையன் வெளியேறிய பின் கொடுமைப் படுத்தப்படும் மக்கள் ஒருபக்கமும், கொடுமைப் படுத்துபவர் மற்றொரு பக்கமும் இருந்தார்கள்.

கொடுமைப்படுத்துவோர் வடநாட்டினராகவும், கொடுமைப் படுவோர் தென்னாட்டினராகவும் இருந்தார்கள்.

வடநாட்டினர் சுரண்டுபவராகவும், தென்னாட்டினர் சுரண்டப் படுபவராகவும் இருந்தனர்.

ஆட்டிப்படைப்பது வடக்காகவும் ஆடி அழிவது தெற்காகவும் இருந்தன.

வடவர் அரசு சுரண்டிக் கொழுக்கிறது அங்கே – கொட்டிக் கொடுத்துவிட்டுத் தேம்பித் தவிக்கிறது தெற்கு இங்கே.

### பழக்கடை – பூக்கடை

பூக்கடைகளில் சில பழங்களும் இருக்கும்; பழக்கடையில் சில பூக்களும் இருக்கும், பழக்கடையில் மாட்டியுள்ள சாமி படத்துக்கு பூ வைத்திருப் பார்கள். பூக்கடையில் உள்ள படத்தின் அருகே பழம் வைத்திருப் பார்கள்.

இதைப் பார்த்துவிட்டு, 'என்ன பழக்கடையில் பூ இருக்கிறதே' என்றோ, 'பூக்கடையில் பழம் இருக்கிறதே' என்றோ கேட்பதில் பொருளில்லை. அப்படிக் கேட்பவர் தத்துவ விசாரணை இல்லாதவர் என்றுதான் பொருள்.

அதைப்போல, நாம் திராவிடநாடு கேட்கும்போது, 'திராவிட நாடு இல்லை என்பவர்களும் இருக்கிறார்களே' என்றால், இது பழக்கடையில் பூ இருப்பதற்கு ஒப்பானதாகும்.

பழக்கடையில் சில அழுகிய பழங்களும் இருக்கும் – பழக்கடைக்காரார் இங்கு யாராவது இருந்தால் வருத்தப்பட வேண்டாம் என்று

கேட்டுக்கொள்கிறேன்; உண்மையைத்தான் சொல்கிறேன் – அதற்கும் பழக்கடை என்று தான் பெயர்.

அதைப்போல ஒரு சிலர் திராவிட நாட்டை ஒத்துக் கொள்ளாவிட்டாலும், இது திராவிட நாடுதான்.

## முயற்சி தேவை ~ திராவிட நாடு கிட்ட!

வடக்கால் நாம் கஷ்டப்படவில்லை என்றால், அப்படிச் சொல்பவர்கள் வடக்குப் பக்கமே இருக்கட்டும். நாங்கள் அவர்களைத் தடுக்கவில்லை. ஆனால், வடநாட்டால் நாம் சீரழிக்கப்படுகிறோம் என்ற நம்பிக்கை இருப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் திராவிடர் என்கிறோம்; அதனால், இந்நாட்டைத் திராவிடம் என்கிறோம். இப்படிச் சொல்லிச் சொல்லி உள்ளத்தில் பதிந்துவிட்டால் இது ஒரு தேசியமாகிறது.

ஒரு கிண்ணத்தில் சந்தனம் இருக்கிறது; அதை எடுப்பதற்குக் கையும் இருக்கிறது; பூசிக்கொள்ள மார்பும் இருக்கிறது. அதை எடுத்துப் பூசிக்கொண்டால் தான் மணக்கும். கிண்ணத்தின் அருகில் அமர்ந்து கொண்டு வா வா என்றால் சந்தனம் தானே வந்தா மார்பில் ஏறும்? எடுத்துப் பூசிக் கொள்ளாமல், 'சந்தனம் வரவில்லையே எதைப் பூசிக் கொள்வது?' என்றால் அதற்கு நான் என்ன செய்ய?

அதைப்போல முயற்சி செய்யாமல் எப்படித் திராவிட நாடு கிட்டும்?

காமராசர் இப்போது கேட்கக்கூடும் – 'படித்தவர்களே திராவிட நாடு வேண்டாம் என்கிறார்களே' என்று! இதற்கும் என்னால் பதில் சொல்லமுடியும். படித்தவர்கள் வேண்டாம் என்று சொல்லும்போதே, நாங்கள் திராவிடநாடு கேட்கிறோம் என்றால் படிக்காதவர் சொல்வதை எப்படி நம்புவது?

இதில் படித்தவரா – படிக்காதவரா என்பதல்ல பிரச்சினை; உண்மையை உணர்ந்தவரா இல்லையா என்பதே பிரச்சினையாகும்.

## 'குருநாதர் கூறியதையே 'மாயை' என்பதா?

'திராவிட உத்கல வங்கா' என்று இரவீந்தரநாத் தாகூர் பாடிய பாடலைப் பாடித்தான் கொடியேற்ற வேண்டும் என்று அரசாங்க விதி இருக்கிறது. அதன்படி ஒவ்வொரு விழா நிகழ்ச்சியிலும் இந்தப் பாடலைப் பாடுகிறார்கள். இத்தனை ஆண்டுக்காலம் இந்தப் பாடலைப் பாடியும் 'திராவிடம் எங்கே இருக்கிறது?' என்று கேட்கிறார்கள். இந்தப் பாட்டை நாள்தோறும் பாடுபவர்கள், அதிகமாகச் சம்பளம் வாங்காத பள்ளி ஆசிரியர்களும், பள்ளிப் பிள்ளைகளும் தான்.

'ஜனகணமன' என்று தொடங்கும் இந்தப் பாடல், எந்த மொழி என்பதே பலருக்குத் தெரியாது. பலபேர் அதை, இந்திமொழி என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அது இந்தியல்ல – வங்காள மொழியாகும்.

'வங்கத்தில்' பிறந்து, உலகம் மதிக்கத்தக்க மேதையாக விளங்கிய இரவீந்திரநாத் தாகூர், அறிவில்லாமல் இப்படிப் பாடவில்லை. ஒவ்வொரு நாடாகப் பிரித்துப் பிரித்துப் பாடினார். சிந்து நதி பாயும் நாட்டைச் சிந்து என்றும், கங்கை நதி பாயும் நாட்டைக் கங்கா என்றும், யமுனை நதி பாயும் நாட்டை யமுனா என்றும் தமது தாயகத்தை வங்கம் என்றும் உ.பி., பீகார், ஒரிசா முதலிய மாநிலங்கள் உள்ள பகுதியை உத்கல் என்றும் குறிப்பிட்டுப் பாடினார். ஆனால், தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கன்னடம் என்று பாடவில்லை; இந்த நான்கு பகுதிகளையும் சேர்த்து 'திராவிடம்' என்றுதான் பாடினார். ஏன் இப்படிச் சொன்னார்? விவரம் தெரியாததால் சொன்னாரா?

பத்து நாட்களுக்கு முன்புதான் நாடெங்கும் தாகூருக்கு விழா கொண்டாடினார்கள். அவரைத் தங்கள் குருநாதர் என்று ஒரு நாள் பேசுவது; பிறகு அவர் சொன்ன திராவிடம் 'மாயை'என்பதா? எங்கே திராவிடம் என்றா கேட்பது?

## உன்னுதிரத்தே உதித்தெழுந்து என்றனரே அவர்கள்!

ஆய்வக நூல்

ஏன் அவர் தமிழ், தெலுங்கு என்று பிரித்துச் சொல்லாமல் திராவிடம் என்றார்?

‘கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் உன்னுதிரத்தில் உதித்தெழுந்து...’ என்று பேராசிரியர் சுந்தரம்பிள்ளை பாடினார். சுந்தரம்பிள்ளையும் கவிஞர் பரம்பரையாகையால், அவர் பாடியதை அறிந்து தாகூரும் பாடினார்.

## சிற்பங்களும் கூறுகின்றன ‘திராவிடக் கலாச்சாரம்’

‘தாகூர் கல்லறைக்கு எங்கே போவது? அதற்கு எங்களுக்கு நேரமில்லை’ என்று சொல்லுவீர்களேயானால் பத்து ரூபாய் செலவு செய்யக்கூடியவர்களுக்கு நான் இன்னொரு யோசனை கூறுகிறேன். ஞாயிற்றுக்கிழமைகளில் மாமல்லபுரத்திற்கு அரசாங்கம் பஸ் விடுகிறது; அதில் ஒரு நாளைக்கு ஏறிப்போய்ப் பாருங்கள். மாமல்லபுர சிற்பங்களுக்கு அரசாங்கமே விளக்கம் தந்திருக்கிறது. அந்த விளக்கங்களி லெல்லாம் ‘திராவிடக் கலாச்சாரம்’ (Dravidian Culture) என்றும் ‘சிற்பக்கலை’ (Dravidian architecture) என்றும் தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதேபோல் ஆந்திரத்தில் உள்ள கோபுரமானாலும், கருநாடகத்திலுள்ள மண்டபமானாலும் அவைகளிலெல்லாம் திராவிடக் கலாச்சாரத்தைச் சேர்ந்தவை என்று தான் குறிப்பிடுவார்கள்.

‘அவ்வளவு தொலைவு போக முடியாதே’ என்றால், இன்னொரு யோசனை சொல்கிறேன். திராவிடம் கிடையாது என்பவர்களே கல்லிலே “திராவிடம்” என்று பொறித்து வைத்திருப்பதைக் காணலாம். ஒரு எட்டணா செலவு செய்து கொண்டு திருவல்லிக்கேணிக் கடற்கரைக்குச் செல்லுங்கள். அங்கேயுள்ள “பிரசிடென்சி கல்லூரி” எதிரில் டாக்டர். உ. வே. சாமிநாத (அய்யர்) சிலை இருக்கிறது. அதைப் பாருங்கள் – எங்கே பெரியார் கோபித்துக் கொள்வாரோ என்ற பயம் உங்களுக்கு வேண்டாம். ஏனென்றால் செத்துப்போன ‘அய்யர்’களிடத்தில் பெரியாருக்குக் கோபம்

கிடையாது – அந்தச் சிலைக்கு அடியில் 'திராவிடக் கலாநிதி' என்று கல்வெட்டிலே பொறித்திருக்கிறார்கள்.

இதுவும் வேண்டாமென்றால் அப்படியே அங்குள்ள பல்கலைக் கழகத்துக்குள் சென்று, டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்களைப் பார்த்து, 'தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளின் துறைக்கு என்ன பெயரிட்டிருக்கிறீர்கள்?' என்று கேளுங்கள். அதற்கு அவர், 'Department of Dravidian Languages' என்று பதிலளிப்பார்.

## வேற்றுமைகள் உண்டு – விளக்கங்கள் – காணீர் !

அய்ந்தாறு மாதங்களுக்கு முன்பு சென்னையில் நடை பெற்ற தமிழிசை மாநாட்டில் தலைமை வகித்த அரியக்குடி இராமாநுசம் அய்யங்கார் சொன்னார் – 'தென்னாட்டு இசைதான் கர்நாடக இசை; கர்நாடக இசைதான் தமிழ் நாட்டு இசையும்' என்று. தமிழ் இசை உந்திக்கமலத்திலிருந்து எழுவது; வடநாட்டு இசை தொண்டைக்குக் கீழே இறங்காது! வடநாட்டு இசையைக் கேட்டவுடன் பாடமுடியும் – தென்னாட்டு இசை பாடலாம் போலத் தோன்றும். ஆனால், எளிதில் பாடமுடியாது. வடநாட்டு இசைக்கு சுர பேதங்கள் அவ்வளவாகக் கிடையாது. அதுவும் பாதி மூக்கை அடைத்துக்கொண்டு பாடவேண்டும்.

இப்படி சங்கீதத்தில் மட்டும் அல்ல – வைத்தியத்திலும் வடநாட்டுக்கும், தென்னாட்டுக்கும் வேற்றுமை இருக்கிறது. இங்குள்ள வைத்தியம் சித்தவைத்தியம்; வடநாட்டு வைத்தியம் ஆயுர்வேத வைத்தியம் என்பதாகும்.

வடக்கே யிருந்து வீசும் காற்று வாடை என்றும், தெற்கேயிருந்து வீசும் காற்று தென்றல் என்றும் பெயர் பெறும்.

## இலக்கியம் தெரியவில்லை எனில் இப்படிச் சொல்வதா?

அந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் உண்ணாதிருந்து உயிர்விடுவது – அதாவது சாவதற்காகவே உண்ணாவிரதமிருப்பது ஒரு பழக்கமாக

இருந்தது. அப்படி உண்ணா விரதமிருப்பவர்கள் வடக்கு நோக்கி இருந்து சாவார்கள். அப்படிச் சாவதற்காக உண்ணாவிரதமிருப்பதை 'வடக்கிருத்தல்' என்றால் செத்துப்போவது என்று பொருள்.

இப்பொழுது 'வடநாடு நரகலோகமும் அல்ல, அங்கே எமகிங்கரருமில்லை' என்பவர்கள் பழந்தமிழ் இலக்கியம் தெரியாததால் அப்படிச் சொல்லுகிறார்கள்.

இப்பொழுதுகூட நமது வீடுகளில் உள்ள பெரியவர்கள், 'வடக்கே தலை வைத்துப் படுக்காதே' என்கிறார்கள். ஏன் என்று கேட்டால் காரணம் சொல்லத் தெரியாது. இந்தப் பழமொழி. நெடுங்காலமாக வழங்கிவருகிறது. வடக்கே ஏதோ ஒரு கூட்டம் இருக்கிறது; அது நமது தலையைத் தடவிவிடும் என்பதுதான் இந்தப் பழமொழி ஏற்படக் காரணமாக இருந்திருக்கவேண்டும்

**படித்துப் பாருங்கள் விளக்கம் கிடைக்கும்!**

'அகில இந்தியாவின் முடிசூடா மன்னர்' என்று புகழப் படுகிறாரே பண்டித ஜவஹர்லால் நேரு – அவர் சிறையிலிருந்தபோது, தம் மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில் விந்திய மலைக்குத் தெற்கே இருப்பதைத் 'திராவிடம்' என்றும் வடக்கே இருப்பதை 'ஆரியவர்த்தம்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவர் அந்தக் கடிதத்தில் தெற்கே இருப்பவர்கள் திராவிடர்கள் என்றும் வடக்கே இருப்பவர்கள் ஆரியர் என்றும் இந்த இரு சாராரும் கலந்திருந்தபோதிலும், தென்னாட்டில் 100–க்கு 90 பேர் திராவிடக் கலாசாரத்தையே இப்போதும் பின்பற்றி வருகிறார்கள் என்றும் எழுதியிருக்கிறார். இந்தப் புத்தகம் காங்கிரசுப் படிப்பகங்களில் இருக்குமானால் படிக்கும் பழக்கமுள்ள காங்கிரசுக் காரர்கள் வாங்கிப் படித்துப் பார்க்கலாம்.

**அவர்களை விட நான் ஆற்றல் பெற்றவனல்ல!**

அமைச்சர் சி. சுப்பிரமணியம் டில்லியிலே திராவிடத்துக்காகவும் வாதாடினேன் என்று பேசியது அவர் மனம் மாறியதால் அல்ல; நான்

அழகாகப் பேசியதாலும் அல்ல; அழகாகப் பேசுவதற்கு என்றால் நாம் சட்டமன்றத்திற்குப் போகவும் தேவையில்லை.

சிறந்த பேச்சாளர் தேவை என்றால் – ஏ. இராமசாமி (முதலியார்) இருக்கிறார்; கல்வித் துறையில் வல்லுநர் தேவை என்றால், ஏ. இலட்சுமணசாமி இருக்கிறார்; இன்னும் சர் சி. பி. இராமசாமி, இராசகோபாலாச்சாரி போன்றவர்களெல்லாரும் இருக்கிறார்கள்; எப்படிப்பட்ட எதிர்ப்புக்கும் அஞ்சாது, காரியத்தில் வெற்றி பெறக் கூடியவரான என்னுடைய ஒரே தலைவர் பெரியார் இராமசாமி இருக்கிறார் – இப்படிப் பட்டவர்களை யெல்லாம் விட நான் பெரிய ஆற்றல் பெற்றவனல்ல.

## சென்றவர்களைக் கேட்டோம் சொன்னது இதுதான்!

ஒரு சில தினங்களுக்கு முன்பு, டெல்லியில் நடந்த 'தேசீய அபிவிருத்திக் குழு'க் கூட்டத்திற்கு நம் நிதியமைச்சர் சென்று வந்தார். 'தேசீய அபிவிருத்திக் குழு' என்று அதற்குப் பெயர் இருப்பதே, இன்னும் தேசீயம் வளரவில்லை என்பதைக் குறிப்பிடுவதாகிறது. தேசீயம் உண்மையில் இருக்குமானால், அதற்கு அபிவிருத்தி தேவையில்லை! ஒவ்வொரு மாநிலத்தின் முதலமைச்சரும் சென்று, 'எங்கள் மாநிலத்துக்கு அந்தத் திட்டம் வேண்டும், இந்தத் திட்டம்வேண்டும்' என்றெல்லாம் கேட்பார்கள்; விவாதம் நடைபெற்ற பிறகு அக்குழு இறுதியாக, எதைச் செய்வது என்று முடிவு செய்யும்.

அந்தத் தடவை, திரு. சுப்பிரமணியம் டெல்லிக்குச் சென்று திரும்பியதும், நாங்கள் அவரைப் பார்த்து, 'டெல்லிக்குச் சென்றீர்களே, என்ன கொண்டு வந்தீர்கள்?' என்று கேட்டோம். கொத்தவால்சாவடிக்குப் போனால் வாழைப் பழமாவது வாங்கி வருவார்கள்; டெல்லிக்குச் சென்றீர்களே, அங்கிருந்து வாங்கி வந்தது தான் என்ன? எதைக் காட்டப்போகிறீர்கள்? கொசு கடித்த தழும்பைக் காட்டப் போகிறீர்களா? நாம் கேட்ட திட்டங்களில் கொடுத்தது போக, கிழித்துப் போட்டதைக் காட்டப் போகிறீர்களா'? என்று கேட்டோம்.

அதற்கு அவர் "நான் டெல்லியிலே வாதாடினேன். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாமல் திராவிடத்துக்காகவும் வாதாடினேன்; இது அண்ணா

துரைக்குத் திருப்தியாக இருக்கும் என்று கருதுகிறேன்" என்று பதில் சொன்னார்.

"அய்ந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டுக்கே ஒதுக்க வேண்டிய திட்டங்களை மொத்தமாக ஒதுக்கி விடுங்கள். அதன் பிறகு தென்னாட்டிலுள்ள நாங்களே எந்த மாநிலத்துக்கு என்னென்ன திட்டங்கள் என்பதைப் பிரித்துப் கொள்ளுகிறோம் என்று டெல்லியில் வாதாடினேன்" என்று அவர் சொன்னார்.

## தேன் சொட்டப் பேசியவர் தெருக்கோடியில் மாறினார்!

மற்றொருமுறை, நிதியமைச்சர் அவர்கள், கிண்டியில் ஏற்படுத்தப்பட விருக்கும் உயர் தரப் பொறியியல் கல்வி நிலையம் பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையில் இந்தக் கல்வி நிலையம் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, திராவிடத்துக்கும் உதவும் என்று கூறி 'இப்படிச் சொல்வது தான் அண்ணாதுரைக்கு திருப்தி ஏற்படலாம் என்று நினைக்கிறேன்!' என்றார்.

இப்படி சட்டசபைக்குள் என் நாக்கில் தேனைத் தடவி விட்டு, தெருக்கோடியில் பேசுகையில் 'ஏது திராவிடம்' என்றால், என்ன பொருள்?

## தேவையான மாறுதல் எவ்வாறு இருப்பது?

நாம் சொல்லும் திராவிடம் வரலாற்றிலே இருக்கிறது; கல்வெட்டிலே இருக்கிறது; சிலர் மாறிவிட்டார்களே என்றால், அதற்காக நாம் பொறுப்பாளிகள் அல்லர்.

சாத்துக்குடியின் தோல் பச்சையாக இருந்தாலும் உள்ளே இருக்கும் சுளை இனிக்கும்; வில்வப் பழத்தின் மேல்புறம் செக்கச் செவேலென்று இருந்தாலும் உள்ளே இருப்பதைத் தின்னமுடியாது. இதை நான் சொல்லுவதால் யாரையும் கேவலப்படுத்துவதாகக் கருத வேண்டாம்.

மாறுதல் தேவைதான் என்றாலும், அந்த மாறுதல் நல்ல மாறுதலாக இருக்கவேண்டும். பால் மோராக மாறுவது நல்ல மாறுதல்; மோர் காடியாக

மாறுவது நல்ல மாறுதலாகாது. குழந்தை பெரியவனாக மாறுவது நல்லது; நல்ல மனிதன் கூனனாக மாறுவது நல்லதல்ல!

### துச்சமாகக் கருதினாரே

ஜனாப் ஜின்னா முதலில் முஸ்லிம் சமுதாய நலனுக்கான 14 கோரிக்கைகளைத் தந்தார். முஸ்லிம் சமுதாயத்துக்கு சட்டமன்றத்தில் தனி இடம், உருது மொழிக்குப் பாதுகாப்பு முதலிய கோரிக்கைகள் அவற்றில் இருந்தன. 'இதைக் கேட்க நீ யார்?' என்று காங்கிரசுக் கட்சியினர் கேட்டனர்; அதற்கு 'நான் முஸ்லிம்களின் தலைவன்' என்றார் ஜின்னா; அதற்குக் காங்கிரசார், 'ஓகோ, நீயா தலைவன்? அபுல் கலாம் ஆசாத், முஹம்மது அலி, ரபி அகமத் கித்வாய், ஷவுகத் அலி ஆகியவர்களெல்லாம் இருக்கிறார்களே?' என்று கேட்டனர்; 'அவர்களை யெல்லாம் நான் துச்சமாகக் கருதுகிறேன்' என்றார் ஜின்னா.

தேசிய முஸ்லிம்கள் தமது திட்டத்தை ஏற்கவில்லை என்பதால் அவர் – திராவிட நாடு வேண்டாம்: தமிழ் நாடு மட்டும் கொடு என்று இங்கு கேட்பவர்களைப் போல – தனது இலட்சியத்தைச் சுருக்கிக்கொள்ள வில்லை; 'நாட்டுப் பிரிவினையே வேண்டாம் பிரிவினையை ஒப்புக்கொண்டால் போதும்' என்றும் கூறவில்லை. தனது கோரிக்கை களின் எண்ணிக்கையை 14–லிருந்து 31–ஆக உயர்த்தினார்; அதன் பிறகு, 'கூட்டு மந்திரிசபை உண்டா?' என்று கேட்டார்! அடுத்து, "நாட்டைப் பிரித்துக் கொடு" என்று கேட்டார்; பிரித்தார்கள்!

### அந்தப் பொறுமை நமக்கு வேண்டாமா?

மார்கழி மாதத்தில் குடுகுடுப்பாண்டிகள் நாள்தோறும் அதிகாலையில் வந்து 'நல்லகாலம் பிறக்குது; நல்ல காலம் பிறக்குது' என்று சொல்லிக் கொண்டு செல்வார்கள். ஒவ்வொரு நாளும் அவனுக்கு ஒன்றும் போடவில்லையென்றாலும், 'மாதம் முடிந்த பிறகாவது ஏதேனும் போட மாட்டார்களா' என்று எதிர்பார்த்து, மாதம் முழுவதும் பொறுமையாக வந்து செல்கிறான்; மாதக் கடைசியில் அவனுக்கு ஏதேனும் கிடைக்கும்.

குடுகுடுப்பாண்டிக்கு இருக்கும் பொறுமைகூட அரசியலில் வேண்டாமா? நாம் என்ன 8 அடி உயரம் 34 அங்குல மார்பு படைத்த பகவத்சிங் பரம்பரையா? நாம் பாடவேண்டிய பாட்டைப் பாடிவிட்டோமா? கொடுக்க வேண்டிய விலையைக் கொடுத்துவிட்டோமா? நீட்டவேண்டிய தியாகப் பட்டியலை நீட்டிவிட்டோமா? இன்னும் நீள வேண்டிய தியாகப் பட்டியல் எவ்வளவோ இருக்கிறது!

**(அறிஞர் அண்ணா அவர்கள் 4.6.1961 அன்று சென்னை கொத்தவால் சாவடியில் ஆற்றிய உரை இது)**

❖ ❖ ❖ ❖ ❖

## திராவிட நாடு கோரிக்கையை விட்டுவிட்டேன்... ஆனால்...

"நான் திராவிடநாடு கோரிக்கையை விட்டுவிட்டேன். ஆனால், திராவிட நாடு கேட்பதற்கு என்னென்ன காரணங்கள் இருந்தனவோ அவற்றில் ஒன்றைக்கூட விட்டுவிடவில்லை. அதில் ஒளிவு மறைவு இல்லை. அதைச் சொல்லிக் கொள்வதற்கு, வெட்கப்படுவதற்கு ஒன்றும் இல்லை. திராவிட நாடு என்று தனியாக இருந்தால் நாம் தொழில் வளர்ச்சி பெறமுடியும் என்று சொன்னோம். திராவிட நாடு வேண்டுமென்று கேட்டதற்குக் காரணமே, இங்கே தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும் என்பதால்தான். அதை நாங்கள் விட்டு விடவில்லை. அடுத்து மொழி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக திராவிட நாடு கேட்டோம். மொழி பாதுகாப்புக் கொள்கையை விட்டு விடவில்லை. மாநில சர்க்கார் பல அதிகாரங்களைப் பல துறைகளிலும் பெறவேண்டும் என்பதற்காகக் கேட்டோம். அதை நாங்கள் விட்டு விடவில்லை.

பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகக் கேட்டோம். அதை நாங்கள் விட்டுவிடவில்லை. ஆகவே, திராவிட நாடு நாங்கள் கேட்டதற்கான காரணங்களில் ஒன்றைக்கூட விட்டுவிடவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால், அவை நியாயமான காரணங்கள். மனமார்ந்து ஏற்றுக்கொண்ட காரணங்கள். மாமியார் வீட்டை விட்டு விட்டான் என்றால் மனைவியை உடன் அழைத்துச் சென்றுவிட்டான். அல்லது வியாழக்கிழமை வா என்று மனைவிக்குச் சொல்லிக் கிளம்பிவிட்டான் என்பதுதானே தவிர, மனைவியையே விட்டுவிட்டான் என்பது பொருள் அல்ல. இந்த மன்றத்தின் மூலமாகப் பொது மக்களுக்கும், மத்திய சர்க்காருக்கும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். திராவிட நாட்டை விட்டு விட்டோம் என்றதாலே காரணங்களையும் விட்டுவிட்டோம் என்பது பொருள் அல்ல. அந்தக் காரணங்கள் அப்படியே இருக்கின்றன. மத்திய சர்க்காரோடு போராடவில்லை. நமது அரசியல் சட்டத்தின் அடிப்படைப் பிரிவுகளிலேயே திருத்தங்கள் வேண்டுமென்பதற்காக வாதாடுகிறேன். அனுபவத்தின் காரணமாக எந்தெந்த வகையில் திருத்தப்பட வேண்டும். எந்தெந்த வகையில் மாற்றப்பட வேண்டும் என்பதை எண்ணிப்பார்க்க நாமனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம்."

(சட்டப்பேரவையில் அறிஞர் அண்ணா, 27-6-1967)

# மாநில சுயாட்சி – ஏன்?

மாநில சுயாட்சி வேண்டும் என்று நாம் கேட்கிறபோது "இப்படிப் பேசுவது மத்திய அரசைக் குலைப்பதாகும், நாட்டுக்குப் பெருத்த ஆபத்து வரும்" என்று காங்கிரசார் கூறுகின்றனர். இது பற்றிய எனது விளக்கத்தைக் கூறும் முன்பு, அவர்களிடம் பணிவன்போடும், உறுதியோடும் கேட்டுக் கொள்வேன்.

நாட்டுக்கு ஆபத்து வரும் என்று அறிந்து கூறவும், நாட்டை வலிமையுள்ளதாக ஆக்கும் உரிமையும் – வழி காட்டும் திறமையும் உங்களைத் தவிர வேறு யாருக்கும் இல்லை என்று நினைத்துப் பேசிட முழு உரிமை யாரால் – எந்தக் காரணத்தால் – எப்போது – உங்களுக்கு அளிக்கப்பட்டது?

குழந்தை தெருவில் சென்றால் கார் வந்து மோதிவிடும்; அதற்கு ஆபத்து வரும் என்று உணர்ந்து அந்தக் குழந்தையைக் காப்பாற்றிட எல்லோருக்கும் உரிமையுண்டு; தேவையுமுண்டு. ஏதோ நாங்கள் பாதை தவறியவர்கள் போலவும் – அவர்கள் தான் காப்பாற்றும் உரிமை படைத்த பாதுகாவலர் போலவும் பேசுவது ஏன்?

காங்கிரஸ் தலைவர்கள் இப்படிப் பேசுவது 15 ஆண்டுகளுக்கு முன் அனுமதிக்கப்பட்ட தவறாக இருக்கலாம். 20 ஆண்டுகளுக்கு முன் மக்களுக்கு இவையெல்லாம் புரியாத காரணத்தால் சரி என்று கூறி ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் விழிப்படைந்த இந்தக் காலத்தில் கூட அப்படிப் பேசுவது – ஆணவத்திற்கு எடுத்துக்காட்டு என்றுதான் உலகம் கருதும். காங்கிரஸ்காரர்களைத் தவிர நாட்டின்மீது மற்றவர்களுக்கு அக்கறை இல்லை என்பது பொருளற்றது; பொருத்தமற்றது; ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியது.

ஆனால், மத்திய அரசின் வேலை என்ன? நாடக மேடையில் வரும் இராஜா, மந்திரியை அழைத்து, "மந்திரி நமது மாநகர் தன்னில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா?" என்று கேட்பானாம். அதுபோல் மாதம் ஒரு முறை மாநில மந்திரிகளை மத்திய மந்திரி டில்லியில் கூட்டி "பள்ளிக்கூடங்களில் கல்வி எப்படி இருக்கிறது? காலரா நோய் தடுக்கப்பட்டு விட்டதா?" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி தர்பார் பேச்சுப் பேசும் பொறுப்புதான் டில்லிக்கு இருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை.

மக்களின் சுக துக்கத்தோடு பின்னிப் பிணைத்திருப்பது மாநில அரசு தானே தவிர – மத்திய அரசு அல்ல.

மக்கள் மீது அக்கறை இருக்கலாம் மத்திய அரசுக்கு. அது எப்படிப்பட்ட அக்கறை? குடிசைப் பகுதியில் தீப்பற்றியதும் மூன்றாவது மாடியிலுள்ள சீமான் – ஏதோ கரும்புகை தெரிகிறதே; பெரும் தீ விபத்துப் போலிருக்கிறதே என்று கூறுவானே, அதைப் போன்ற அக்கறைதான் அது.

ஆனால், குடிசைப் பகுதியில் தீப்பற்றியதும் பதறித் துடிப்பவர் யார்? அந்தக் குடிசைக்குப் பக்கத்தில் உள்ள குடிசைவாசிதான். அதைப் போல மாநில அரசினர்தான், மக்களின் குறைகளை நேருக்கு நேர் சந்திக்க வேண்டியவர்கள்.

அதிகாரம் தேவைக்கு அதிகமாக மைய அரசிலே குவிந்துவிட்டதால் என்ன நடக்கிறது? நான் அண்மையில் டில்லி உணவு அமைச்சகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். எனக்குத் தொலைபேசியில் பேசும் சக்தி அதிகம் இல்லையாதலால் என்னுடைய நண்பரை விட்டுப் பேசச் சொன்னேன். உணவு அமைச்சர் ஜெகஜீவன்ராம் ஊரில் இல்லாததால் துணை அமைச்சர் ஷிண்டே என்பவர் பேசினார். கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் இருந்து சர்க்கரையை வெளிக் கொணரும் உததரவு டில்லியில் இருந்து வராததால் பெருத்த நஷ்டம் ஏற்படும் என்ற விஷயத்தை அவருக்குக் கூற முயன்றோம்.

கள்ளக்குறிச்சி என்ற பெயரைப் புரிந்து கொள்ள 15 நிமிடம் ஆயிற்று. பெயரைப் புரிந்துகொள்ள முடியாததற்காக அவர் மீது நான் குற்றம்

சாட்டவில்லை. சர்க்கரை ஆலை இப்போது தமிழ்நாட்டில்; அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் டில்லியில் என்று அதிகாரத்தைப் பிரித்துத் தந்தார்களே அவர்கள்தான் குற்றவாளிகள்.

ஆனால், மத்திய அரசின் வலிவு, அசாமிற்கு அச்சத்தைத் தர – தமிழ்நாடு தத்தளிக்க, கேரளத்திற்குக் கலக்கம் தருவதற்காகத்தான் என்றால், நமது சுதந்திரச் சிந்தனையைச் சிறுகச் சிறுக அழித்து சிந்திக்கும் திறனே இல்லாமல் ஆக்குவதற்குத் தான் என்றால்,

நமது கூட்டுச் சக்தியின் மூலம், நம்மில் ஒவ்வொருவருடைய வலுவையும் கொண்டு அந்த அக்கிரம வலிவைச் சிறுகச் சிறுகக் குறைப்பதுதான் எங்கள் கடமையாக இருக்கும்.

மத்திய அரசு பலமாக இருந்தது குப்த சாம்ராஜ்யத்தில்! மத்திய அரசு பலமாக இருந்தது மொகலாய சாம்ராஜ்யத்தில்! மத்திய அரசு பலமாக இருந்தது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில்! ஆனால், இன்று அந்தச் சாம்ராஜ்யங்கள் எங்கே?

சரிந்த சாம்ராஜ்யங்களுடன் – இப்போது இருக்கிற சாம்ராஜ்யத்தை ஒப்பிடுவதற்கு உள்ளபடியே வருத்தப்படுகிறேன். அந்த சாம்ராஜ்யவாதிகள் – தங்கள் சாம்ராஜ்யங்களுக்கு அதிகமான வலிவு தேட முயற்சி செய்த ஒவ்வொரு நேரத்திலும் சரிவு தான் ஏற்பட்டது என்பதைச் சரித்திரமுணர்ந்தவர்கள் அறிவார்கள்.

அவுரங்கசீப் காலத்தில் இருந்த வலிவான மத்திய ஆட்சிக்கு ஒப்பான மத்திய ஆட்சியைச் சரித்திரத்தில் காண முடியாது. ஆனால், அந்தச் சாம்ராஜ்யம் என்ன ஆயிற்று என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நமக்கிருக்கிற கவலை எல்லாம் – தூக்க முடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான். மத்திய அரசின் வலிவு என்பது மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிவையும் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான் என்றால் வாதத்திற்கு ஏற்றது; அரசியலுக்கு

நல்லது; காரியத்திற்கும் உகந்தது. ஆனால், மத்திய அரசுதான் எல்லா உரிமைகளையும், பலத்தையும் வைத்திருக்கும்; மாநிலங்கள் தத்தித் தத்தி நடக்கும் அதிகாரம் தான் வைத்திருக்கும் என்றால், அது எதற்கும் பொருத்தமுடையதல்ல.

மாநில அதிகாரங்களை எல்லாம் எடுத்து மத்திய அரசு குவித்து வைத்துக் கொள்வதால், மாநிலங்கள் பலவீனமடையும் என்பது மட்டுமல்ல, மத்திய அரசுக்கென்று புதிய வலிவு ஏதும் ஏற்பட்டுவிடாது.

நாட்டுப் பாதுகாப்புத் தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தையும் பற்றிச் சிந்திப்போம். மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மாநிலங்கள் எடுத்துக் கொள்ளட்டும். பின்னர் மாநிலங்கள் விரும்பித் தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும்.

தற்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தை ஆராய்ந்து மாநில – மத்திய அரசுகளுக்குள்ள அதிகாரப் பங்கீடுகளை மாற்றி அதிக அதிகாரங்களை மாநிலங்களுக்குத் தர வேண்டும். அதற்கான ஒரு குழு நியமித்து ஆராயவேண்டுமென்று நிருவாகச் சீர்திருத்தக் குழுவிடம் நான் யோசனை தெரிவித்துள்ளேன்.

இன்றைய தினம் மாநில அரசுக்குள்ள வேலை என்ன? மக்களுக்குச் சோறுபோடுவது – வேலை வாய்ப்புத் தருவது – தொழில் நீதியை நிலைநாட்டுவது – சுகாதாரத்தைப் பேணுவது – கல்விச் செல்வத்தை வளர்ப்பது போன்ற எண்ணற்ற வேலைகளைச் செய்ய வேண்டியது மாநில அரசு.

பலமான மத்திய அரசு வேண்டும் என்று கூறுகிறார்கள். மத்திய அரசுக்குப் பலம் எதற்காக? அந்தப் பலம் யாருக்கு எதிராக? என்பதையும் நாம் சிந்தித்துப் பார்த்திட வேண்டும்.

பலம் என்பது தனிப்பட்ட ஆளுக்கு இருக்கலாம்; தனிப்பட்ட அமைப்புக்கு இருக்கலாம்; மாநிலத் துரைத்தனத்துக்கு இருக்கலாம்; மத்தியத் துரைத்தனத்துக்கு இருக்கலாம். ஆனால், அந்தப் பலம் யாருக்காக –

எதற்காகப் பயன்படுத்துவது என்பது பற்றி விளங்கிக் கொள்ளாமலும் விளக்கிச் சொல்லாமலும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

சீனாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மத்திய அரசுக்கு வலிவு தேவை என்றால், நிச்சயம் அந்த வலிவைத் தேடித்தரத் தயார்.

இப்படி கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் இருந்து, காட்பாடி சிறு தொழிற்சாலை வரை எல்லாவிதமான சிறு விஷயங்களிலும் மத்திய அரசே அதிகாரத்தை வைத்துக் கொண்டிருப்பதன் விளைவு, பெரிய விஷயங்களில் அதிகக் கவனம் செலுத்த முடியாமல் போய்விடும் என்பதால்தான், அதிகாரங்கள் டில்லியில் குவிக்கப்படக்கூடாது என்கிறோம்.

ஆகவே, வலிவான மத்திய அரசு தான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பது தவறு. மாநில சுயாட்சி தர தயக்கம் காட்டுவார்களேயானால், அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தாங்கித் தாங்கிப் பாதுகாப்புப் போன்ற பெரிய விஷயங்களில் சோடை போய் விடுவார்களோ என்பதுதான் எங்கள் சந்தேகம்.

மேல் அதிகாரம் அனைத்தும் டில்லியில் இருப்பதை மாற்றிடத்தான், மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்துள்ளது.

*(தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் 28.7.1968 அன்று சென்னையில் ஆற்றிய உரை இது)*

❖ ❖ ❖ ❖ ❖

தற்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தை ஆராய்ந்து மாநில மத்திய அரசுகளுக்குள்ள அதி காரப் பங்கீடுகளை மாற்றி அதிக அதிகாரங்களை மாநிலங் களுக்கு தரவேண்டும்.

அதற்கான ஒரு தேசிய குழு நியமித்து ஆராய வேண்டுமென்று நிருவாகச் சீர்த்திருத்தக் குழுவிடம் நான் யோசனை தெரிவித்துள்ளேன்.

**-அறிஞர் அண்ணா**

(இந்நூல் பக்கம் 23)